# செங்கல்பட்டு நகராட்சி

## <u>அவசரக் கூட்டம்</u>

### <u>2018ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17 ம் தேதி முற்பகல் 11.00 மணியளவில் செங்கல்பட்டு நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்னிலையில் நடைபெற்ற சாதாரணக் கூட்டம்.</u>

----

பொருள் – 1

இந் நகராட்சியின் பணி ஒப்பந்ததாராக உள்ள திரு இராஜகோபாலன் என்பவர் இந் நகராட்சிக்குட்பட்ட ஒப்பந்தப் பணியில் கலந்து கொண்டு, அதற்கான பணி அவருக்கு கிடைக்கப்பெற்று, மேற்படி பணிக்கான உத்திரவு வழங்கப்பட்டு பணியும் முடிவு பெற்றது. எனவே மேற்படி பணி செய்ததில் பிடித்தம் செய்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பணிதரக்காப்பு தொகையினை திரும்ப வழங்க கோரியுள்ளார்.

| வ.எண் | பணியின் விவரம் | ஒப்பந்ததாரர் பெயர் | வைப்புத் தொகை |
|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட சப் கலெக்டர் அலுவலக நீர் உந்து நிலைய செயல்திறன் மேம்பாட்டு மற்றும் லீயோ கார்டன் வரை பிரதான நீரேற்று நிலைய குழாய் அமைக்கும் பணி. | திரு இராஜகோபாலன் | ரூ.57,500/– எம்–புக் எண்.89/ 2015–16 பக்கம் எண்.4 |
| 2 | | திரு இராஜகோபாலன் | ரூ.57,500/– எம்–புக் எண்.89/ 2015–16 பக்கம் எண்.5 |
| 3 | | திரு இராஜகோபாலன் | ரூ.1,25,674/– எம்–புக் எண்.89/ 2015–16 பக்கம் எண்.6 |

மேலும் மேற்படி பணி முடிக்கப்பட்டு விட்டதாக நகராட்சி பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் குறிப்பின்படி தொகை திரும்ப வழங்கவும் மேற்படி பணியில் 2015–16ம் ஆண்டு தணிக்கை தடை ஏதுமில்லை என தணிக்கை எழுத்தர் தனது குறிப்பில் தெரிவித்துள்ளார். எனவே மேற்படி ஒப்பந்ததாரிடம் பிடித்தம் செய்யப்பட்டுள்ள பணி தரக்காப்பு தொகையினை திரும்ப வழங்க மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது. (ந.க.எண்.0956/2018/பி1)

அலுவலக குறிப்பு–

மன்ற ஒப்புதல் அளிக்கலாம்.

பொருள் – 2

இந் நகராட்சியின் பணி ஒப்பந்ததாராக உள்ள திரு சி. வீரப்பாண்டியன் என்பவர் இந் நகராட்சிக்குட்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டார். அதற்கான பணி அவருக்கு கிடைக்கப்பெற்றது. மேற்படி பணிக்கான உத்திரவு வழங்கப்பட்டு பணியும் முடிவு பெற்றது. எனவே மேற்படி பணியில் பிடித்தம் செய்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பணிதரக்காப்பு தொகையினை திரும்ப வழங்க கோரியுள்ளார்.

| வ.எண் | பணியின் விவரம் | ஒப்பந்ததாரர் பெயர் | வைப்புத் தொகை |
|---|---|---|---|
| 1 | மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி. | திரு சி. வீரப்பாண்டியன் | ரூ.57,500/– எம்–புக் எண்.41/ 2015–16 பக்கம் எண்.18 |
| 2 | | திரு சி. வீரப்பாண்டியன் | ரூ.11,500/– எம்–புக் எண்.41/ 2015–16 பக்கம் எண்.16 |

மேலும் மேற்படி பணி முடிக்கப்பட்டு விட்டதாக பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் குறிப்பின்படி தொகை திரும்ப வழங்கவும் மேற்படி பணியில் 2015–16ம் ஆண்டு தணிக்கை தடை ஏதுமில்லை என தணிக்கை எழுத்தர் தனது குறிப்பில் தெரிவித்துள்ளார். எனவே மேற்படி ஒப்பந்ததாரர் செலுத்தியுள்ள பணி தரக்காப்பு தொகையினை திரும்ப வழங்க மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்ற ஒப்புதல் அளிக்கலாம்.

பொருள் – 3

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் கொசுப்புழு ஒழிப்பு பணிக்கு பயன்படுத்தும் அபேட் மருந்து குறைவாக 10 லிட்டர் உள்ளதால் PNMSC Suppliers, மூலம் பெறப்பட்ட புள்ளிவிவரத்தின்படி 50 லிட்டர் அபேட் வாங்க 18 சதவீதம் ஜி.எஸ்.டி. உள்ளிட்ட ரூ.40,000/–க்கு வாங்கி பயன்படுத்தி கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2614/2018/எச்1)

பொருள் – 4

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பரவி வரும் டெங்கு, பன்றி காய்ச்சல் பரவாமல் தடுப்பதற்கும், காய்ச்சல் கண்ட இடங்களில் புகை மருந்து மூலம் பரவுவதை தடுக்க புகை மருந்து அடிக்கும் இயந்திரம் ஒன்று சிறியது வாங்க தோராய செலவு ரூ. 1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் – 5**

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பரவி வரும் பன்றி காய்ச்சல் தடுக்க 5 சதவீதம் லைசால் தெளிக்க மாவட்ட ஆட்சித் தலைவர், காஞ்சிபுரம் மற்றும் துணை இயக்குனர், சுகாதார பணிகள் அவர்கள் தெரிவித்துள்ளார். இதனை ஏற்று பொது இடங்கள் மற்றும் பேரூந்துகளில் தெளிக்க லைசால் திரவம் TUSC மூலம் 100 லிட்டர் அளவில் வாங்கவும் அதனை தெளிக்க தெளிப்பான் 5 எண்ணிக்கை வாங்க ரூ.20,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**பொருள் – 6**

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் கொசு ஒழிப்பு பணிக்கு புகை மருந்துடன் பயன்படுத்த மாலத்தியான் தேவைப்படுவதால் TNMSC அங்கீகாரம் பெற்ற வழங்குனர் மூலம் 200 லிட்டர் மருந்தினை வாங்க செலவினம் ரூ. 1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் – 7**

செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான சமுதாயக் கூடத்திற்கு 19.2.2018 முதல் குத்தகை உரிமம் திரு எ. கண்ணன் என்பவருக்கு நிபந்தனைகளின்படி வழங்கப்பட்டது. மேலும் குத்தகைதாரர் இந் நகராட்சி அனுமதியின்றி சமுதாயக்கூட வளாக பகுதியில் கூடுதல் கட்டிடம் கட்டி அதில் வணிக பயன்பாட்டிற்கு பயன்படுத்த மேற்கொள்கையில் இந் நகராட்சி அலுவலர்கள் மூலம் மேற்படி கடை மூடி சீல் வைக்கப்பட்டது. இதனை அடுத்து குத்தகைதாரர் இந் நகராட்சிக்கு எதிரா மாவட்ட உரிமையியல் நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். வழக்கு எண். ஒ.எஸ்.178/2018க்கு இந் நகராட்சி சார்பாக அரச வழக்கறிஞர் திரு சி. ஆர். விநாயகம் அவர்கள் வழக்காடி வருகிறார். மேற்படி வழக்கறிஞர் வழக்காடிய நாட்கள் 22.10.2018, 23.10.2018, 31.10.2018, மற்றும் 9.11.2018க்கான வழக்காடி தொகை ரூ.20,000/– ம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

நகராட்சியின் சார்பாக வழக்காடும் அரசு வழக்கறிஞர் உடனுக்குடன் மேல் நடவடிக்கை மேற்கொண்டு வருவதால் வழக்காடு தொகை வழங்க முன் அனுமதி வழங்கலாம்.

**பொருள் – 8**

செங்கல்பட்டு நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் குப்பைகளை அல்ல பயன்படுத்தப்படும் டிராக்டர் வண்டி எண். டி. என். 21 எ.எக்ஸ் 4146 வாகனம் பழுதடைந்து உள்ளதால் குப்பைகளை சரிவர அப்புறப்படுத்த படாத நிலை உள்ளது. எனவே இப்பழுதுகளை சரி செய்ய தோராய செலவு ரூ.10,000/– ம் ஆகும் செலவினத்திற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று பழுதினை சரி செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.2619/2018/எச்1)

**பொருள் – 9**

இந் நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் நகர் நல அலுவலர் பயன்படுத்தப்படும் ஈப்பு வாகனம் டி. என். 21 டி 7583 வாகனம் சிறு சிறு பழுதுகள் (ரேடியேட்டர், வைப்பர்) பழுதினால் தற்போது ஓடாத நிலையில் உள்ளதால், மேற்படி வாகனம் மஹந்திரா நிறுவனத்தில் அணுகியதற்கும் மற்றும் ஜெயின் கார்ஸ் அவர்களை கேட்டதற்கும் இவை பழைய வாகனம் என்பதால் நிறுவனத்தில் பார்க்க உதிரிபாகங்கள் இல்லை என தெரிவித்ததால் பழைய வாகனங்கள் பழுது பார்க்கும் மெக்கானிக் ஒர்க்ஷாப்பில் பழுதினை சரி செய்யும்படியும், அதற்குண்டான செலவினத்திற்கு தோராய செலவினம் ரூ. 50,000/–க்கு வழங்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.2618/2018/எச்1)

**பொருள் – 10**

இந் நகராட்சியின் பொது சுகாதார பிரிவில் தினசரி குப்பைகள் அள்ளப் பயன்படும் வாகனம் வண்டி எண். டி.என். 21 ஜெ 1812 லாரியின் டயர்கள் அனைத்து பழுதடைந்து உள்ளது. இதனால் ஜெ.சி.பி. தொடர்பான பணிகள் செய்வதில், உருவாகும் கழிவுகள் அப்புறப்படுத்துவதில் காலதாதம் ஏற்படுவதாக நகர் நல அலுவலர் மற்றும் துப்புரவு ஆய்வாளரின் குறிப்பின்படி மேற்கண்ட லாரிக்கு 6 டயர்கள் வாங்க தோராய செலவு ரூ.50,000/–க்கு உள்ளூர் அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடம் இருந்து விலைப்புள்ளிகள் பெற்று அதில் குறைந்த விலைப்புள்ளி உள்ள நிறுவனத்திடம் இருந்து வாங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியநிமித்தம் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்க பின்னேற்ப்பு வழங்கலாம்.

பொருள் – 11

செங்கல்பட்டு நகராட்சி மக்காத கழிவுகள் அனைத்தையும் எரிவாயுவாகவும், Pyro oil ஆகவும் மாற்றும் முறை செயல்படுத்தப்பட உள்ள நிலையில் , இதன் தொடர்பாக கோவையில் இயங்கி வரும் Enviro Energy மற்றும் பைரோலிஸிஸ் மாதிரி பிளான்ட் மற்றும் Max India Shredder Plant (செடி தொழிற்சாலை) ஆகிய நிறுவனங்களை நேரில் ஆய்வு செய்து வருவது சம்மந்தமாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 3.12.2018ம் தேதிய வாட்சப் குறுஞ்செய்தியை தொடர்ந்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், மண்டல பொறியாளர், நகராட்சி ஆணையர், நகர் நல அலுவலர் மற்றும் துப்புரவு ஆய்வர் அவர்கள் அனைவரும் கோவைக்கு ஒரு நாள் 5.12.2018 அன்று சென்று வந்ததற்கான செலவின உத்தேச தொகை ரூ.40,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) பொது சுகாதாரப் பணியில் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் – 12

செங்கல்பட்டு நகராட்சியில் பொறியியல் பிரிவின் குடிநீர் லாரி வண்டி எண். டி.என். 19 எப். 1668 க்கு தகுதி சான்றிதழ் பெறுவதற்கு நகர மன்ற தீர்மான எண். 613 நாள் 31.10.2018 அன்று நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு 15.11.2018 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதின் விவரம் பின்வருமாறு.

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்ப்பீடு | ஒப்பந்தாரர் பெயர் / சதவீதம் |
|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு நகராட்சியின் குடிநீர் லாரிக்கு தகுதி சான்றிதழ் பெறும் பணி. | ரூ.1.45 லட்சம் | காவேரி டிராக்டர்ஸ், செங்கல்பட்டு 1.38 சதவீதம் குறைவு |
| 2 | | | மெட்ராஸ் பார்ம் எக்யூப்மெண்ட்ஸ், மதுராந்தகம், 0.34 சதவீதம் அதிகம். |

மன்றத்தின் பார்வைக்கும் குடிநீர் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியது மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) மன்றம் பின்னேற்ப்பு வழங்கலாம்.
2) மேற்படி குடிநீர் லாரிக்கு சாலைவரி மற்றும் காப்பீடு தொகை வருவாய் நிதியிலிருந்து செலுத்த மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் – 13

செங்கல்பட்டு நகராட்சி தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை தரம் பிரித்தெடுக்க மக்காத குப்பைகளை பிரித்தெடுக்க பைரோலிஸிஸ் பிளான்ட் உள்ள மிஷினெரிக்கு முன்முனை இணைப்பு மின் வாரியத்தில் அளிக்கப்பட்ட விண்ணப்பத்தின் மூலமாக 13.12.2018 அன்று மின் வாரிய பணியாளர் மதிப்பீடு தயார் செய்ய வேண்டி பார்வையிட்டதில் அப் பகுதியில் உள்ள 40 எச்.பி. மெஷினரிக்கு தேவையான இ.பி. போர்டு, பவர் காப்பர் ஒயர் மற்றும் கேபிள், பேனல் போர்டு ஆகியவைகள் சி.டி. காயில் அமைப்புடன் தேவை என்பதனை கருத்தில் கொண்டு மதிப்பீடு தயார் செய்தல் மற்றும் மின்வாரிய டெபாசிட் தொகை மற்றும் மூம் முனை இணைப்பு பெற ஆகும் உத்தேச தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி நிதிக்கான செலவினை தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் – 14

1) Resolved that Chengalpattu Municipality is authorizing the authorized signatory to borrow the intereat free loan of Rs.120.15 lakhs (rupees one crore twenty lakhs and fifteen thousand only) from TUFIDCO for Provision of Internal Plumbing for HSC (Minimum 3600 Nos) for making optimization utilization of water supply at Chengalpattu Municipality under revolving fund of UIDSSMT as per the terms and conditions prescribed by TUFIDCO.
2) The Authorized signatory be and hereby authorized to execute the loan agreement and other documents if any with TUFIDCO and complete all the other formalities including affixing of the common seal of Chengalpattu Municipality on the documents to be executed with TUFIDCO ON BEHALF OF Chengalpattu Municipality.

3) Resolved to repay the interest free loan as per the interest free loan as per the repayment schedule in the agreement.
4) Resolved to adhere to time line as envisaged DPR.
5) Resolved that Chengalpattu Municipality is authorized signatory to make necessary budgetary provisions in Chengalpattu Municipality annual budget for the repayment of principal for the project proposal to TUFIDCO and is hereby confirmed that all dues will be paid in time without default for creating sustainable revolving fund.
6) Resolved that Chengalpattu Municipality is authorized signatory to open and operate an ESCROW account for water Supply in favour of TUFIDCO till the repayment loan.

**Office Note:-**

Council may accord permission.

**பொருள் – 15**

இந் நகராட்சியின் நகர மன்ற தீர்மானம் எண். 637 நாள் 31.8.2018ன்படி செங்கல்பட்டு நகராட்சிக்கு உட்பட்ட புதிய பேருந்து நிலையத் எதிரில் அமைந்துள்ள தந்தை பெரியார் வணிக வளாக கட்டிடத்தின் பின்புறம் 1988ம் ஆண்டு கட்டப்பட்ட கட்டிடத்தில் நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் அலுவலகம் இயந்தி வந்தது. மேற்படி கட்டிடம் 10.7.2010ம் தேதியன்று தீ விபத்து ஏற்பட்டு கட்டிடம் சேதமடைந்ததால் மேற்படி இயங்கி வந்த அலுவலகம் காலி செய்யப்பட்டது. தீ விபத்தினால் கட்டிடத்தின் மேற்கூரையில் சில இடங்களில் ரூப் சிலாப் இடிந்துள்ளது. இதனால் பயன்பாடற்ற நிலையில் இருந்த கட்டிடத்தின் பாதுகாப்பு கருதி நகர மன்ற தீர்மானம் எண். 302 நாள் 28.12.2017 ன்படி அனுமதி பெறப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டது.

மேற்படி கட்டிடம் இருந்த இடம் தற்போது காலிமனையாக உள்ளது. அதன் அருகாமையில் இரயில் நிலையம் உள்ளதால் பயணிகள் பெருமளவு வந்து செல்வதாலும் அக் காலியிடத்தினை குத்தகை இனமாக மாற்றம் செய்து வாகனங்கள் நிறுத்தும். இடமாக கொண்டு அதற்கான தொகை நிர்ணயம் செய்து பொது ஏலம் நடத்தி அதில உயர்ந்தபட்ச தொகை கோரும் நபருக்கு குத்தகை விடுவதன் மூலம் இந் நகராட்சியின் வருவாய் உயர்வு பெரும். இவ்விளம்பர அறிவிப்பு விளம்பரம் செய்யும் நாள் முதல் 15 நாட்களுக்குள் ஆட்சேபனை ஏதுமிருப்பின் நேரிலோ அல்லது கடிதம் மூலமாகவே இந் நகராட்சியில் தெரிவிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டது. அதன்படி 20.11.2018ம் தேதியன்று தி இந்து தினசரி தமிழ் நாளிதழில் மேற்படி பொருள் குறித்து

விளம்பரம் செய்யப்பட்டு 15 நாட்களுக்கு மேல் கடந்த நிலையில் எந்த ஒரு ஆட்சேபனையும் இந் நகராட்சியில் பெறப்படவில்லை.

1) எனவே மேற்கடி காலி இடத்தினை வாகனங்கள் நிறுத்துமிடமாக மாற்றம் செய்து அதனை குத்தகை இனமாக கொண்டு சென்ற

அ) சிற்றுந்து (கார்) நிறுத்துவதற்கு 6 மணி நேரத்திற்கு = ரூ.20/– வீதம்

ஒரு மாதத்திற்கு கார் நிறுத்துவதற்கு = ரூ.750/– வீதம் வசூலிக்கவும்

ஆ) இரு சக்கர மோட்டார் வாகனம் நிறுத்துவதற்கு 12 மணி நேரத்திற்கு = ரூ.10/– வீதம்

ஒரு மாதத்திற்கு நிறுத்துவதற்கு = ரூ.300/– வீதம் வசூலிக்கவும்

இ) மிதிவண்டி (சைக்கிள்) 12 மணி நேரம் நிறுத்துவதற்கு = ரூ.5/– வீதம்

ஒரு மாதத்திற்கு நிறுத்துவதற்கு = ரூ.125/– வீதம் நிர்ணயம் செய்யவும்

2) மேற்படி நிர்ணயம் செய்யப்பட்ட தொகையினை அடிப்படையாக கொண்டு பொது ஏலம் நடத்தி அதன் மூலம் உயர்ந்தபட்ச தொகை கோரும் நபருக்கு குத்தகை உரிமம் வழங்கவும்

3) மேற்படி பொருள் குறித் விளம்பர அறிவிப்பு தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டு 15 நாட்களக்க மேல் ஆகிவிட்டதாலும் இதன் பொருள் குறித்து ஆட்சேபனை ஏதும் இந் நகராட்சியில் வரவில்லை என்பதால் இவ் அறிவிப்பினை மாவட்ட அரசிதழில் பிரசரம் செய்யவும் அதற்கான செலவினத் தொகையினை வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.1235/2018/அ1)

பொருள் – 16

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை, மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், செங்கல்பட்டு அவர்களின் ஆய்வு கூட்டத்தில் 2018–19ம் ஆண்டு வரியினங்களில் டிசம்பர் 2018க்குள் 100 சதுவிதம் வசூல் இலக்கு அடைய வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது இந் நகராட்சியில் வரியினங்களின் வசூல் சதவீதம் குறைவாக உள்ளது. அதற்காக குழுக்கள் அமைக்கப்பட்டு வரி வசூல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் வசூல் இலக்கு முழுவதும் அடைவதற்க குறகிய காலம் உள்ளது என்பதால் தினசரி மூன்று சக்கர மோட்டார் வாகனம் (ஆட்டோ) மூலம் பொது மக்களக்க வரி தொகை செலுத்திட கோரி 20.12.2018 முதல் பிரசாரம் செய்வதற்கும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுலுலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.1690/2018/அ1)

பொருள் – 17

இந் நகராட்சியின் கணிணி பிரிவில் மற்றம் வரி வசூல் மையத்தில் உள்ள எச்.பி. பிரிண்டர் மற்றும் டாட் மெட்ரிக்ஸ் பிரிண்டர் இயங்காமல் பழுதடைந்துள்ளதால், மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், செங்கல்பட்டு அவர்கள் 19.11.2018 அன்று நடத்திய ஆய்வு கூட்டத்தில் தெரிவித்துள்ளபடியும், தற்போது சொத்துவரி சீராய்வு பணி நடைபெற்று வருவதால் உடனடியாக அனைத்து கணிணி உபகரணங்கள் வாங்கி தயார் நிலையில் உபயோகப்படுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே கணிணி மற்றும் வரி வசூல் மையத்திற்க தேவையான பிரிண்டர்கள் வாங்கி கொள்ள உள்ளூர் நிறுவனத்திடம் இருந்து விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட நிறுவனத்திடம் இருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | எண்ணிக்கை | விலைப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1 | G Soft System, Chennai | 2<br>3 | ரூ.53,000/–<br>ரூ.53,400/– |
| 2 | Cursor Solution. Chennai | 2<br>3 | ரூ.54,000/–<br>ரூ.54,000/– |
| 3 | JP Soft System. Chennai, | 2<br>3 | ரூ.54,200/–<br>ரூ.54,300/– |

மேற்படி வரப்பெற்ற 3 விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) வரப்பெற்ற 3 விலைப்புள்ளிகளில் G Soft System, Chennai அளித்துள்ள விலைப்புள்ளி மிகவும் குறைவாக இருப்பதால் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2) அவசரம் அவசியம் கருதி மேற்படி கணிணி இயந்திரங்கள் வாங்கி கொள்ள தனி அலுவலரின் முன் அனுமதி பெற்ற நடவடிக்கை மேற்கொள்வதாலும் அதற்கு ஆகும் செலவின தொகை தோராயமாக ரு.1.25 இலட்சத்திற்க மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

பொருள் – 18

இந் நகராட்சி ஒப்பந்ததாரர்களின் பட்டியலில் பிடித்தம் செய்யப்படும் வருமான வரி அரசு கணக்கில் ஆன் லைன் மூலம் TDS Return filed செய்வதற்கு எப்ரல், மே, ஜுன், –18 முதல் காலாண்டு மற்றும் ஜுலை, ஆகஸ்ட், செப்டம்பர் –18 இரண்டாம் காலாண்டுக்கு பட்டியல் தொகை

ரூ.10,000/— வழங்குமாறு M/s Challenger Consultancy Service, சென்னை என்ற நிறுவனத்தின் இடமிருந்து பட்டியல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி பணி அவசியம் தேவைப்படுவதால் அதனை செய்து கொள்ளவும் அதற்குண்டான செலவினம் தொகை ரூ.10,000/—மேற்படி நிறுவனத்திற்கு வழங்கவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு—

1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணி செய்ததற்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

தனி அலுவலர்,
செங்கல்பட்டு நகராட்சி.